# நீங்கள் ஹெபடைடிஸ் B பாதிப்புடன், கருவுற்றுமிருந்தால் உங்களுடைய

**ஹெபடைடிஸ் B என்பது உங்கள் குழந்தையின் வாழ்நாள் முழுவதும் நீடித்து இருக்கக்கூடிய ஒரு தீவிர நோயாகும். நீங்கள் கருவுற்றிருந்து, ஹெபடைடிஸ் Bஆல் பாதிப்படைந்திருக்கும் பட்சத்தில், உங்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கும், பிரசவத்தின் போது உங்கள் ரத்தத்தின் மூலம் பாதிப்பு ஏற்படலாம். உங்கள் குழந்தைக்கு தொற்று ஏற்படுவதைத் தடுக்கவும், நீங்கள் ஆரோக்கியமாக இருக்கவும், உங்கள் கர்ப்ப காலத்தின் துவக்கத்திலேயே உங்கள் சுகாதார வழங்குநரை சந்தித்து, ஹெபடைடிஸ் B பற்றி அவர்களிடம் கலந்தாலோசிக்கவும்.**



**கர்ப்ப காலத்தின் போதும், அதற்குப் பிறகும் நீங்களும், உங்கள் குழந்தையும் எடுத்துக் கொள்ள வேண்டிய பராமரிப்பைக் கண்காணிக்க இந்த விளக்கப்படத்தைப் பயன்படுத்தவும்!**

## தாய்மார்களுக்கானவை

### கர்ப்பகாலத்தின் போது

- உங்கள் கர்ப்ப காலத்தின் துவக்கத்திலேயே உங்கள் ஹெபடைடிஸ் B இன் வைரஸ் அளவு மற்றும் உங்கள் கல்லீரலின் செயல்பாட்டை அறிந்துகொண்டு ஹெபடைடிஸ் B பராமரிப்பைப் பெற ஒரு சுகாதார வழங்குநரை சந்திக்கவும்.
  - தேவைப்படும் பட்சத்தில், ஹெபடைடிஸ் B மருந்தை உங்கள் சுகாதார வழங்குநர் பரிந்துரைக்கலாம்.

### குழந்தைப் பிறப்பின் போது

- நீங்கள் ஹெபடைடிஸ் Bஆல் பாதிக்கப்பட்டிருப்பதை மருத்துவமனை ஊழியர்கள் அறிந்துள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- நீங்கள் ஹெபடைடிஸ் Bஆல் பாதிக்கப்பட்டிருப்பதை உங்கள் குழந்தையைப் பராமரிக்கும் சுகாதார வழங்குநர் அறிந்துள்ளார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

### குழந்தைப் பிறப்பு மற்றும் அதற்குப் பிறகான காலத்தின் போது

- 1- 2 மாதங்களில், ஹெபடைடிஸ் B பராமரிப்பைப் பெற உங்கள் சுகாதாரப் பராமரிப்பு வழங்குநரை தொடர்ந்து சந்திக்கவும்.
  - கர்ப்ப காலத்தின் போதே நீங்கள் சிகிச்சையைத் துவங்கினால் இதனைக் கருத்தில் கொள்வது முக்கியமாகும்.
- 6 மாதத்திற்கு ஒருமுறை, ஹெபடைடிஸ் B பற்றிய கண்காணிப்பிற்காக உங்கள் சுகாதாரப் பராமரிப்பு வழங்குநரை தொடர்ந்து சந்திக்கவும். 6 மாதங்களில்.

**கர்ப்பகாலத்தின் போது, உங்கள் துணை மற்றும் உங்களுடன் வசிப்பவர்கள் ஹெபடைடிஸ் B க்காக பரிசோதனை செய்துகொள்வதையும் மற்றும் தடுப்பூசி செலுத்திக் கொள்வதையும் உறுதிபடுத்திக்கொள்ளுங்கள்.**

## குழந்தைகளுக்கானவை

### குழந்தைப் பிறப்பின் போது

குழந்தை பிறந்த 12 மணி நேரத்திற்குள் நோய்த்தொற்றிலிருந்து பாதுகாக்க 2 ஊசிகள் செலுத்தப்படவேண்டும்:

- ஒரு ஹெபடைடிஸ் B இம்யூன் குளோபுலின் (HBIG) ஊசி
- ஹெபடைடிஸ் B தடுப்பூசியின் 1ஆவது ஊசி

### 1-2 மாதங்களில்

- உங்கள் குழந்தைக்கு 2ஆவது ஹெபடைடிஸ் B தடுப்பூசி செலுத்த வேண்டும்.

### 6 மாதங்களில்

- உங்கள் குழந்தைக்கு 3ஆவது ஹெபடைடிஸ் B தடுப்பூசி செலுத்த வேண்டும்.

### 9-12 மாதங்களில்

- உங்கள் குழந்தையினுடைய ஹெபடைடிஸ் Bஇன் நிலையை அறியவும், அவர்களின் பாதுகாப்பின் அளவை மதிப்பிடவும் இரத்தப் பரிசோதனை அவசியம்.

### தாய்ப்பாலூட்டுதல்

- உங்கள் இரத்தத்துடன் குழந்தைக்கு ஏற்படும் தொடர்பைக் குறைக்க, முலைக்காம்புகளில் ஏற்படும் வெடிப்பு அல்லது ரத்தக்கசிவை எவ்வாறு தடுப்பது அல்லது நிர்வகிப்பது மேலும் தாய்ப்பாலூட்டுதலுக்கான உதவியைப் பெறுதல் ஆகியவை குறித்து உங்கள் சுகாதார வழங்குநரிடம் கலந்துரையாடுங்கள்.
- பிரசவத்தின் போதே குழந்தைக்கு ஹெபடைடிஸ் B தடுப்பூசி மற்றும் ஹெபடைடிஸ் B இம்யூன் குளோபுலின் ஆகியவை செலுத்தப்பட்டிருக்கும் பட்சத்தில், தாய்ப்பாலூட்டுவதன் மூலம் தாயிடமிருந்து குழந்தைக்கு ஹெபடைடிஸ் B பரவும் ஆபத்து மிகக் குறைவு. உங்கள் குழந்தைகளுக்கு இந்த ஊசிகள் செலுத்தப்பட்ட பின்பு, தாய்ப்பால் அளிப்பது பாதுகாப்பானதாகும்.

Hep B Hub
doh.wa.gov/hepbhub

Washington State Department of Health

DOH 420-441 October 2022 Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள்திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov. என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும். North East Medical Services, www.nems.org இலிருந்து தழுவி எடுக்கப்பட்டது.